## 11.7 1999 – 2000 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் ஊரக உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட சமன்பாடு மற்றும் ஊக்க நிதியை பகிர்ந்தளிக்கப்பட்டதில் திருத்தம் வெளியிடுதல்

ஊரக வளர்ச்சித் துறை

அரசாணை (நிலை) எண். 74 நாள் : 23.03.2000

படிக்க :

1. அரசாணை(நிலை) எண். 151, ஊரக வளர்ச்சித் துறை நாள்–22.07.1999
2. ஊரக வளர்ச்சி இயக்குநர் கடிதம் எண்.50474/1999/ஊ.அ.தி.1, நாள் 03.03.2000.

**ஆணை:**

படிக்கப்பட்ட அரசாணையில் இனம் 2.2 ல் ஊராட்சிகளில் உள்ள இடுகாட்டினை எல்லா சாதியினரும் வேறுபாடின்றி பயன்படுத்தியிருந்தால் அந்த ஊராட்சிக்கு ஊக்க நிதியாக ரூ.1.00 லட்சம் வீதம் 250 ஊராட்சிகளுக்கு ரூ.2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது.

2. இரண்டாவதாக படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதத்தில் மொத்த ஒதுக்கீட்டில் இது வரை ரூ.1.24 கோடி ஊராட்சிகளுக்கு ஊக்க தொகையாக வழங்கப்பட்டுள்ளதாகவும், எஞ்சியுள்ள தொகையான ரூ.1.26 கோடியினை ஊராட்சிகளில் தார்ச்சாலை வசதிகள் ஏற்படுத்தி உபபோயப்படுத்திக் கொள்ள அரசின் அனுமதியை கோரியுள்ளார்.

3. மேலே பத்தி 2–ல் ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று அரசாணையில் இனம் 2.2 ல் ஒதுக்கப்பட்டுள்ள மொத்த ஒதுக்கீடான ரூ.2.50 கோடியில் ரூ.1.24 கோடி ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டது போக எஞ்சியுள்ள தொகையான ரூ.1.26 கோடியினை ஊராட்சிகளில் தார்ச்சாலை வசதிகள் ஏற்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பெற்று வழங்கவும், ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. ஆணையிடப்பட்ட இச்செலவினம் கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:

“3604.00 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் – 200 ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் – 1 திட்டத்தில் சேராதது – BB, மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கான ஒரு மொத்த நிதி ஒதுக்கம் – 09. உதவி மான்யங்கள் (DPC எண். 3604–00–200–BB–0909)

5. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.20528/ஊரக வளர்ச்சி/2000–1, நாள் 20.03.2000 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்